★ விலை ரூபா 1=25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 கார்த்திகை 26 ரபி.அவ் 6 இதழ் 300
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12-12-83

## "உலகத் தலைவர்களின் ஆதரவை இந்தியா திரட்ட வேண்டும்"

### உலகத் தமிழர் எழுச்சி மாநாடு கோரிக்கை

(சென்னை)

பாலஸ்தீனம், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் பிரச்னையில் உலகத்தலைவர்களின் ஆதரவைத் திரட்டியதுபோல் இலங்கைத் தமிழர் பிரச்னையிலும் உலகத்தலைவர்களின் ஆதரவைத்திரட்ட உதவுமாறு இந்திய மத்திய அரசை திருச்சி உலகத்தமிழர் எழுச்சிமாநாடு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஏற்பாடு செய்த இம்மாநாடுமுத்தமிழ்க் காவலர் கி. ஆ. பொ. விசுவநாதம் தலைமையில் நேற்று ஆரம்பமானது

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திராவிடகழக பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணி டாக்டர்இரா ஜனார்த்தனம் உட்பட பலர் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

இலங்கைத் தமிழ்மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படு

(8-ம் பக்கம் பார்க்க

## சர்வகட்சி மாநாடு அடுத்தவாரம் அழைப்பு; மாத இறுதியில் முதல் அமர்வு

## கூட்டணியின் பங்கு: அதிக கட்சி ஆதரவு!

(நமது சிறப்பு நிருபர்)

**தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதற்கான யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் கூட்டப்படவுள்ள உத்தேச வட்டமேசை மாநாட்டுக்கு, அடுத்தவார முற்பகுதியில் அழைப்பு விடுக்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரியவருகிறது.**

**உத்தேச சர்வகட்சி மாநாட்டின் முதலாவது அமர்வு மாதஇறுதி வாரத்தில் நடைபெறும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

மகாநாட்டின் முதலாவது அமர்வின்போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விடுப்பதுபற்றி ஆராயப்பட்டு, மகாநாட்டின் அங்கீகாரத்துடன் தொடர்ந்து நடைபெறும் சர்வகட்சி மாநாட்டுக்கு கூட்டணிக்கு அழைப்பு அனுப்புவதென்று அரசாங்கம் முன்னர் முடிவு செய்திருந்தது.

அதே நேரத்தில் ஐ. தே. க. வின் 29-வதுமாநாட்டில்பேசிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டால் மட்டுமே கூட்டணி அழைக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

நிலைமைஇவ்வாறிருந்தபோதிலும் பெரும்பாலான எதிர்க்கட்சிகள் முன் நிபந்தனை எதுவுமின்றி கூட்டணிக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தையே கொண்டிருப்பதால், வட்டமேசை மாநாட்டில் முதலாவது அமர்வுக்கு கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கே வரும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மாநாட்டுக்கு அழைக்கப்படவுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது அரசியல் கட்சிகளில் சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ். இ. தொ. கா ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்பன கூட்டணி அழைக்கப்படவேண்டும் என்ற கருத்தையே கொண்டிருப்பதுடன் இதனையே வலியுறுத்தியும் வருகின்றன.

தமிழரசுக்கட்சிக்கு அழைப்பு அனுப்பப்பட்டு மாநாட்டில் கலந்து கொண்டால் அதுவும் இதனையே வலியுறுத்தும் என்றே தெரிகிறது.

ஐ தே க. வும் மக்கள் ஐக்கிய முன்னணியுமே இது குறித்து கட்சி ரீதியாக கருத்து எதுவும் வெளியிடவில்லை.

மாநாட்டில் கலந்து கொள்ளும் கட்சிகளில் பெரும்பாலானவை கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்படவேண்டும் என்ப

[8-ம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்னையின் தீர்வுகள் மக்கள் முன் வைக்கப்படும்! -ஜே. ஆர்.-

(கொழும்பு)

இலங்கையில் தற்போதுஉருவாகியிருக்கும் இனப்பிரச்னைக்கு சர்வகட்சி மாநாட்டில் ஏதாவது தீர்வுகள் காணப்படுமானால் அத்தீர்வுகள் பற்றிய சகலவிபரங்களும் மக்கள்மத்தியில் முன்வைக்கப்பட்டு அவர்களின் சம்மதம் பெறப்படுமென்றும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உம்புறுவ ரஜகம விகாரையில் நடந்த சமயநிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அண்மையில் நடந்த இனக் கலவரங்களினால் இலங்கையின் நற்பெயருக்கு கெட்டபெயர் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஒரு கலவரம் இனிமேல் நடவாது நாம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும்அவர் குறிப்பிட்டார். (சூ)

## திருட்டுகள் பலவிதம்; ஒவ்வொன்றும் தனிரகம் இப்படியும் பலே ஆசாமிகள்!

(யாழ்ப்பாணம்)

பிழையான தகவல்களை நம்பக்கூடியதாகத்தெரிவித்து பட்டப்பகலில் ஏமாற்றிக்கொள்ளை அடிக்கும் புதுவித கொள்ளைக் கோஷ்டியினரின் அட்டகாசம் மீண்டும் யாழ். மாவட்டத்தில் தலை எடுக்கத் தொடங்கியுள்ளது.

இக்கோஷ்டியினரைச்சேர்ந்த ஒருவரின் கையில் காங்கேசன் துறை ஊறணியைச் சேர்ந்த ஒரு வயோதிப மாது சிக்கித் தனது 10 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியையும் அவருக்குச் சொந்தமானகாணி உறுதியையும் பறிகொடுத்துள்

[8ம் பக்கம் பார்க்க]

## ஜி.ஸி.ஈ. 'மனையியல் செய்முறைப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துக!"

### கல்வி அமைச்சின் செயலாளருக்கு 'ஆலால்' அவசரத் தந்தி

(அரியாலை)

மனையியல் செய்முறைப் பரீட்சையில் தமிழ் மாணவிகள் பங்குபற்ற முடியாதிருப்பதால், அப்பரீட்சையை, யாழ்ப்பாணத்தில்நடத்துமாறு கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் கல்வி அமைச்சின் செயலாளரையும் பரீட்சை ஆணையாளரையும் அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

தெஹிவளை பல்தொழில் நுட்பக் கல்லூரியில் மனையியல் செய்முறைப் பரீட்சை இம்மாதம் 23, 26, 27-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சையில் 50 வீதமான தமிழ் மாணவிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

தற்போதுள்ள நிலைமையில், கொழும்பு சென்று, தங்கி 3 தினங்கள் பரீட்சை எழுதவும், போதிய பாதுகாப்பில்லை எனக் கருதப்படுவதால், பெற்றோர்கள் இதுபற்றி கோப்பாய் எம். பி.யின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து கோப்பாய் எம் பி திரு. எம். ஆலாலசுந்தரம் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கோரியுள்ளார். (க)

## கல்வி அமைச்சருக்கு மாணவிகள் தந்தி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் க. பொ. த உயர்தர பரீட்சை மனையியல் பாடத்திற்கு விண்ணப்பித்திருந்த 23 மாணவிகளுக்கு செய்முறைப்பரீட்சை தெஹிவளையில் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருப்பதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போதயசூழ்நிலையில்தாம் கொழும்பு சென்று தெஹிவளையில் இந்த செய்முறைப்பரீசைக்குத்தோற்றமுடியாது இருப்பதால் இப்பரீட்சையை யாழ். மாவட்டத்தில் நடத்தஒழுங்கு செய்யுமாறு மேற்படி கல்லூரி மாணவிகள் 23பேரும் யாழ். கல்விப்பணிப்பாளர் ஊடாக கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் மேற்படி மனையியல் செய்முறைப் பரீட்சையை தமது வித்தியாலய மாணவிகளின் நலன்கருதி யாழ்மாவட்டத்தில் நடத்த ஒழுங்கு செய்யுமாறு கோரி தந்தியொன்றை கல்விச்சேவைகள்

(8-ம பக்கம் பார்க்க)

## பங்களாதேஷ் ஜனாதிபதி ராஜினாமா!

டாக்கா, டிச 11

பங்களாதேஷ் ஜனாதிபதி சௌத்திரி பதவியை ராஜினாமா செய்ததைத்தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக தலைமை இராணுவச்சட்ட நிர்வாகி திரு. எர்ஷாத் பதவியேற்றுள்ளார்.

பதவியிலிருந்த 16 பேர் கொண்ட மந்திரிசபையும் கலைக்கப்பட்டுள்ளதாக புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அடுத்தவருடம் நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத் தேர்தலும், மேமாதத்தில் ஜனாதிபதி தேர்தலும் நடத்தப்படுமென்று புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளார். (சூ)

## நோர்வே புனர்வாழ்வுக்குழு கைதடி முகாமுக்கு விஜயம்

(மட்டுவில்)

நோர்வே புனர்வாழ்வுத் திட்டக்குழு ஒன்று கைதடி அகதிகள் முகாமிற்கு நேரடியாக விஜயம் செய்து, அங்குள்ள அகதிகளுக்கு போர்வைகளை அன்பளிப்புச் செய்துள்ளது. இப்போர்வைகளை, நோர்வேக் குழுவினர் அகதிகளின் ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள உறுப்பினர்கள் தொகைக்கேற்ப வழங்கியுள்ளனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (10252)

---

18/1 மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தில் 2 பரப்புகாணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. சுற்றுமதில் கிணறும் உண்டு. தொடர்பு: க. இரத்தினம் 55, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். 10495

---

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து கால்மைல் தூரத்தில் சண்டிலிப்பாய் வீதியில் வீடு கட்டுவதற்கு மூன்று பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: S. A. பொன்னுத்துரை சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு 10494

---

புதிதாகப் பக்கிங் உடையாத நிலையில் 8. 5 CC. Kenwood குளிர்சாதனப்பெட்டி, Sony 2060E 20'' கலர் ரெலிவிசன் (குறைந்த மின்சாரம் உள்ள இடத்திலும் தெளிவாகச் செயற்படக்கூடியது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரஞ்ஜனுஸ் வீடியோ சென்ரர், 60, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10478

---

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையில் 20 பரப்பு காணியும் வீடும் மின்சாரவசதியுடன் விற்பனைக்கு உள்ளது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல; 10329 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10329

---

AUDI 80 G L இன 10 ஸ்ரீ வரிசையில் இலண்டனிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட மிகவும் நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்கு உண்டு தொலைபேசி: 24351, 146, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 10480

---

இலண்டனில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய 8 பற்றி ஒரேநேரத்தில் சாச் பண்ணக்கூடிய பற்றி சாச்சர் உண்டு. இராசா டீசல்ஸ், 180, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10476

---

புத்தம்புதிய Palladium Radio Double Tape Cassette Recorder விற்பனைக்குண்டு. விலைவிபரங்கட்கு: பஸ்தியாம்பிள்ளை, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எந்நேரமும் தொடர்பு கொள்ளவும். 10505

---

விபத்துக்குள்ளாகி முன்பகுதி மட்டும் சேதமாகிய C D 200 HONDA விற்பனைக்குண்டு. தொடர்பு S. மரியதாஸ், அன்னம்மாள் கோவிலடி, மானிப்பாய். 10506

---

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன சுறித் தென்னம்பிள்ளைகள் (Hybrid) விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். (510

## தேவை

றபர் ஸ்ராம், பிளாஸ்ரிக் போட் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும், சுபா றபர் ஸ்ராம்ஸ், 35/1, புங்கன்குளம் ரோட், யாழ்ப்பாணம். 10452

## சேவை

திறமைமிக்க வீடியோ படப்பிடிப்புக்கும் புதிய T. V டெக், கசற் வாடகைக்கும் புதிய பழைய T. V. க்களையும் டெக்குகளையும் வாங்கவும் விற்கவும் நாடுங்கள் ரஞ்சனுஸ் வீடியோ சென்ரர், 60, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10477

---

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 10509

## வைத்தியம்

மனநோய், அல்சர், மூலம், சர்மரோகங்கள், நரம்புத் தளர்ச்சி எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன் 218/5 பலாலி ரோட், கந்தர்மடம். 10355

## தவறிவிட்டது

ஒரு கிழமைக்கு முன்னர் திருநெல்வேலி சந்திக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் இரண்டு போட்டோ அல்பம் [இறந்தவர் படங்கள்] தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். தில்லையம்பலம், வளாக லேன், திருநெல்வேலி தெற்கு. 10514

## பயிற்சி

ஆண் - பெண் இருபாலாருக்கும் கார் ஓட்ட கற்றுத்தரப்படும். வசீகரன் ''சரஸ்வதி பூங்கா'', சேர்ச் லேன், சாவகச்சேரி. தொலைபேசி: 273. 10515

---

மோட்டார் மெக்கானிஷம்- எலக்ரிக்கல் வயறிங் - வெல்டிங் பயிற்சிகள் 12-12-1983ல் ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியறிங் ரெக்னொலொஜி 11B மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10324

---

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

### கேள்வி விண்ணப்பம்

### வெற்றுச்சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச் சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/-(ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம், ''பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என்ற முகவரிக்கு 20-12-83க்குப் பிந்தாமல் (கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி) அனுப்புதல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு,
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன். 10497

## ஏல விற்பனவு

ஊர்காவற்றுறை தபால் கந்தோரடி சிறீமதி சி. கனகரத்தினம் அவர்களிடம் 1 - 1 - 80 தொடக்கம் 30 - 6 - 82 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 4 - 1 - 1984 காலை 9 மணி தொடக்கம் அதே அடைவுகடையில் வைத்து என்னால் விற்கப்படும்

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 10380

---

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த சண்முகம் முருகேசு பேரம்பலத்தின் மரண சாதன விடயத்தில்
இறந்தவர்
வழ. இல: மரணசாதன நியாயாதிக்கம்: ரி/83
சிதம்பரம் கைம்பெண் எஸ். எம். பேரம்பலம் பொன்னுவலை களபூமி காரைநகர்.
மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
நடராசா
பதிவாளர்

வரைதல்:
ஒப்பம்:
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
10473

---

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையாவின் மரணசாதன விடயத்தில்
இறந்தவர்
வழ. இல: மரணசாதன நியாயாதிக்கம்: ரி/82
கந்தையா ஜெயசிங்கம் தங்கோடை காரைநகர்.
மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
நடராசா
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின்
சட்டத்தரணி 10474

---

### ஷண்!

உடனே கொழும்புக்கு வரவும். பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கலாம். தவருது வரவும். தயக்கம் எதுவும் வேண்டாம்.

-மாமா-
யாழ்ப்பாணம்.
10462

---

விசுவமடுக்குளம்
வாலிபத்திட்ட
விவசாயக்
கூட்டுறவுச் சங்கம்

### கேள்வி விளம்பரம்

விசுவமடுக்குளம் வா. தி. வி. கூ. சங்கத்தில் வெற்றுச்சாக்குகளும் உழவு இயந்திர உதிரிப் பாகங்களும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றன.

ரூபா 250/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

1. வெற்றுச்சாக்குகள் 2500.
2. உழவு இயந்திர கலப்பை [HAROW] — 01
3. உழவு இயந்திர மட்டப்படுத்தல் [LEVELER] — 01

கேள்விப்பத்திரம் 26-12-83ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

பொதுமுகாமையாளர்
வா. தி. வி. கூ. சங்கம்
விசுவமடுக்குளம்,
முல்லைத்தீவு.
10520

---

பின்னுறுதிக்கட்டளை
பற்றிய

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
காலம்சென்ற சிவகுரு பொன்னையா என்பவரின் மரணசாதனமற்ற சொத்தின் விடயத்தில்
சிவகுரு பொன்னையா கைம்பெண் நேசம்மா தேவாலய வீதி, கொக்குவில்.
— மனுதாரர்.

மரணச்சொத்து
நியாயாதிக்கம்
இல. 3768

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட, இறந்துபோனவரின் மரணசாதனத்தினை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு தை மாதம் 27ம் திகதி அல்லது அதற்கு முன்னர் முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தேவைப் படுத்தபடுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
க. குலசிங்கம்
பதிவாளர்.

1983ம் ஆண்டு மார்கழி 5ம் திகதி.

தயாரித்தது:
ஒப்பம்
T. சண்முகராஜா
மனுதாரின் சட்டத்தரணி.
10437

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபாய் 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின் முழுப்
பணத்தையும் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

---

## 90-வது நாள் நினைவஞ்சலி



மலர்வு :
10 - 02 - 1948

உதிர்வு :
14 - 09 - 1983

திருமதி சுதந்திரநாயகி கிளேற்றன் (தேவி)

என்றும் எம் நினைவில் கலந்த
எம் அன்புத் தெய்வமே,
எம்மை விட்டு நீர் மறைந்து
மும்மாதம் கரைந்ததம்மா,
சீரோடு வாழ்ந்த உம்மை
சிந்தனையில் ஏற்றிவைத்தே,
நீரோடும் கண்களுடன் நித்தம்
உம்மை துதித்திருப்போம்.

89, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரர்.
10501

# அமெரிக்க - இஸ்ரேல் ஒத்துழைப்பு உலக நாடுகளுக்கு அச்சுறுத்தல்!

## சோவியத் பத்திரிகை 'பிராவ்தா' கருத்து

### மேற்காசியாவில் ஆக்கிரமிப்பு மையத்தை ஏற்படுத்தவும் முனைகின்றனவாம்!

மாஸ்கோ, டிச. 11

அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் இராணுவ நடவடிக்கைகளும், ஏனைய ஒத்துழைப்புக்களும் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன என்று சோவியத் யூனியன் பத்திரிகையான 'பிராவ்தா' தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் கிரனடா ஆக்கிரமிப்பு, லெபனானில் அதன் இராணுவ நடவடிக்கை, அத்துடன் இஸ்ரேல் அதற்கு உதவிவருவது ஆகியவற்றைக் கண்டித்தே அக்கட்டுரை 'பிராவ்தா'வில் எழுதப்பட்டுள்ளது.

அதில் மேலும், மேற்காசியாவில் இஸ்ரேலுடன் கூட்டாக அமெரிக்கா இராணுவ ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் நடந்துகொள்ளும்விதம் மேற்காசியாவில் மட்டுமல்லாது, மத்திய கிழக்கிலுள்ள சகல நாடுகளையும் எவ்வேளையிலும் பதட்டமான ஒரு சூழ்நிலையில் இருக்கச்செய்கிறது

இவ்விருநாடுகளும் மேற்கு ஆசியாவில் தம் இராணுவநடவடிக்கைகளைப் பலப்படுத்தி வருகின்றன. இஸ்ரேலுக்கு அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளிப்பதே இவ்வாறு அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்திருப்பதன் நோக்கமாகும். அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியன மேற்காசியாவில் ஒரு ஆக்கிரமிப்பு மையத்தைத் தோற்றுவிக்க முனைகின்றன என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் நேற்று ஒருசெய்தி வெளியிட்டுள்ளார். அதில், கிரனடாவிலிருந்து இந்த மாத முடிவிற்குள் அதாவது கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்னர் அமெரிக்கத் துருப்புகள் அமெரிக்காதிரும்பிவிடுமென்றும், லெபனானிலுள்ள அமெரிக்கத் துருப்புகள் குறித்துத் தாம் விரைவில் ஆவனசெய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். [கி]



கொரிய மக்கள் குடியரசு பொது விவகார அமைச்சரும் குடியரசுத் தலைவரின் தூதுவருமான எச். ஈ. லீடே சுப் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனாவைச் சந்தித்து ஆலோசனைகள் கூறினார்.

# தமிழ்மகன் சந்திரசேகர் 'நோபல்' பரிசு பெற்றார்!

ஸ்ரொக்ஹோம், டிச. 11

தமிழகத்தில் பிறந்த டாக்டர். சுப்பிரமணியம் சந்திரசேகர் நேற்று பௌதிகத்துக்கான 'நோபல்' விருதை சுவீடன்மன்னரிடமிருந்து பெற்றார்.

தற்போது அமெரிக்கப் பிரஜையாகவிருக்கும் டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர் இந்தியாவின் 'நோபல்' பரிசு அறிஞரான டாக்டர் சி. வி. ராமனின் உறவினரென்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் சந்திரசேகருக்கு வழங்கப்பட்ட பௌதிகத்திற்கான 'நோபல்' பரிசு டாக்டர் வில்லியம் ஏ. பௌலர் என்ற அறிஞருக்கும் சேர்த்துக் கூட்டாகவே வழங்கப்பட்டது.

டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர் 'நட்சத்திரங்களின் தோற்றங்கள், அமைப்பு' ஆகியனபற்றி நடத்திய ஆய்வுக்கே 'நோபல்' பரிசைப் பெற்றார்.

சுவீடன் மன்னர், ஸ்ரொக்ஹோம் நகரில் நடந்த கண்கவர் வைபவத்திலேயே 'நோபல்' விருதுகளை, அதனைப் பெற்றவர்களுக்கு வழங்கினார்.

சமாதானத்திற்காகப் போலந்து நாட்டின் சொலிடாறிற்றி தொழிற் சங்கத் தலைவர் திரு. லேக்வாலேஸாவுக்கு 'நோபல்' சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

ஆனால் திருமதி வாலேஸாவே இப்பரிசைத் தமது கணவர் சார்பில் நேரில் வந்து பெற்றுக்கொண்டார். வாலேஸாவின் மூத்த புதல்வரும், அவரது பத்திரிகையாளரான நண்பரொருவரும் திருமதி வாலேஸாவுடன் 'நோபல்' பரிசு வழங்கும் வைபவத்திற்கு வந்திருந்தனர். திரு. வாலேஸா சொலிடாற்றி இயக்க உறுப்பினர்கள் சிலர் போலந்து அரசில் சிறைவைக்கப்பட்டிருக்கும்போது தாம் 'நோபல்' பரிசுக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வது அழகல்லவென்று தெரிவித்தே அப்பரிசை நேரில்பெற வரவில்லை.

கனடாவைச் சேர்ந்த ஹென்றியோவ் என்பவருக்கு இரசாயனத்துக்கான 'நோபல்' பரிசும், பாபரா மக்கின்ரா என்பவருக்கு மருத்துவத்திற்கான 'நோபல்' பரிசும் கிடைத்தன. பாபராமக்கின்ராவே மருத்துவத்திற்கான 'நோபல்' பரிசு பெறும் முதலாவது பெண்மணியாவார். பிரிட்டனைச் சேர்ந்த வில்லியம் கோல்டிங் என்பவருக்கு இலக்கியத்திற்கான 'நோபல்' விருது கிடைத்தது. [கி]

# சர்வதேச இஸ்லாமிய நீதிமன்றம்!

டாக்டா, டிச. 11

சர்வதேச இஸ்லாமிய நீதிமன்றமொன்றை நிறுவ இஸ்லாமிய நாடுகள் முடிவு செய்துள்ளன. பங்களாதேஷில் நடந்த இஸ்லாமிய நாடுகளின் உச்சிமகாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

உத்தேச இஸ்லாமிய நீதிமன்றத்தின் செயல்பாடு, அதன் விதி முறைகள், சட்டங்கள் என்பனபற்றியும் இந்த உச்சி மகாநாட்டில் ஆராயப்பட்டது.

இச்சர்வதேச நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பான முடிவுகள் மொரோக்கோவின் கஸபிளாங்கா நகரில் நடைபெறவுள்ள 4-வது இஸ்லாமிய மகாநாட்டில் எடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. [கி]

# ஆர்ஜன்டீனாவில் மீண்டும் ஜனநாயக ஆட்சி

புவனர்ஸ் அயர்ஸ்

ஆர்ஜன்டீனாவில் எட்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் ஜனநாயக ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து ஆர்ஜன்டீனா அரசியல் வட்டாரங்களிடையேயும் பொது மக்களிடையேயும் பெரும்மகிழ்ச்சி காணப்பட்டு வருகிறது.

கடந்த எட்டு ஆண்டுகால இராணுவ ஆட்சியை ஆர்ஜன்டீனாவின் முப்படைகளையும் சேர்ந்த தளபதிகள் மற்றும் இராணுவப் பிரமுகர்கள் நடத்தி வந்தனர்

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ஆர்ஜன்டீனாவில் இராணுவ ஆட்சிக்கெதிராக மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. இந்த அதிருப்தியை நீக்க அப்போதைய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் கல்டெய்ரி பிரிட்டனுக்குச் சொந்தமான ஆர்ஜன்டீனா அருகிலுள்ள போக்லண்ட்தீவு மீது படையெடுத்தார். இப்படையெடுப்பு தோல்வியில் முடியவே அவர் பதவியிலிருந்து இறங்கினார். அதனைத்தொடர்ந்து [ஆர்ஜன்டீனாவில் இராணுவ ஆட்சி ஆட்டம் கண்டது. ஆர்ஜன்டீனாவில் இராணுவ ஆட்சியின் போது அரசுக்கெதிரானவர்கள் போர் வீரர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

சகல
பாட்டா
பாதணிகளும்
மலிவு விற்பனை
விலை 30-00 முதல்
241-90 வரை
எஸ். சின்னத்துரை அன் சன்
39, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-02 | 'உதைபந்தாட்டம்' ஜெர்மனிய கழகங்களுக்கிடையிலானது. |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-30 | யோகாசனப் பயிற்சிகள் |
| 7-45 | 'செவைவல்' வன விலங்குகள் பற்றிய சித்திரம் |
| 8-15 | செய்திகள் [சிங்களம்) |
| 8-30 | செவைவல்(தொடர்ச்சி) |
| 9-00 | 'லவ் போர்ட்' நகைச்சுவை சித்திரம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'லவ் போர்ட்' (தொடர்ச்சி) |
| 10-15 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## இவர்களுக்கு "போனஸ்" கிடைத்தது!

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் இருவருட "போனஸ்" வழங்கப்பட்டுள்ளது.

1981 ஆம், 82 ஆம் ஆண்டுகளுக்கான போனஸ் பணமே தற்போது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1983-ம் ஆண்டிற்கான "போனஸ்" பணத்தை ஊழியர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளைச் சங்க இயக்குநர்சபைத்தலைவர் திரு. வே. கதிர்காமலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

## மணிவாக்கு

சிந்தனைத் திறனற்றவனுக்கே கேளிக்கை இன்பம் அளிக்கிறது.

—ஆங்கிலக் கவி போப்.

# நமதுநோக்கு

## அது ஒரு ஒத்திகையா?

"ஆதியே அமரர் கோவே அணியணுமலை யுளானே
நீதியால் நின்னையல்லால் நினையுமா
நினைவிலேனே"

என்பது அப்பர்சுவாமிகள் தேவாரம்.

"பங்கயத்தயனு
மாலறியா நீதியே"

என்பது மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.

"வானமுகில் வழாது பெய்க" என்று தொடங்கும் திருப்புராணம். 'கோன் முறை அரசுசெய்க' என்ற ஏற்றத்தில் போய், "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற உச்சியைத் தொடுகின்றது.

"உலகமெல்லாம் சைவ நீதி விளங்குக" என்பது சைவர்கள் அல்லது திராவிடர்கள் உலகனைத்தையும் ஆளும் நோக்கங் கொண்டவர் என்றோ, அல்லது நீதியிலும் சைவநீதி என்ற பிரிவினை கோரப்படுகின்றதென்றோ கொள்ளப்படவில்லை.

சைவ நீதியென்றால் தெய்வநீதி; அல்லது தெய்வம் என்றே சொல்லலாம். பங்கயத்தயனும், மாலும் அறியமுடியாத நீதியென்றபடியால் மண்ணுலகிலே நீதியை வழங்க எத்தனை படிகளில் நீதிமன்றம் அமைத்திருக்கிறார்கள். ஒன்பது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அண்மையில் ஒரு வழக்கை விளங்கினார்களல்லவா? தெய்வத்தின் பெயரிலே இவ்வுலக ஆட்சி எந்த நாட்டிலும் நீதிவழங்குகின்றது. அது வழுக்கினால் 'தெய்வம் நின்றறுக்கும்' என்பார்கள்.

எனவே அநீதியை இழைத்து ஒருவாறு தப்பிவிட்டோமென்று வெற்றி கொண்டாடுபவர்கள் இன்னொரு மேல் முறையீட்டுமன்றம் இருக்கிறதை மறத்தலாகாது; அதுவும் இவ்வுலகில்தான்.

நீதியைப்பற்றி நீண்ட அறிமுகம் செய்யவேண்டிய அவசியம், நாம் மறந்துவிடவேண்டுமென்று விரும்பிய வேதனையான சம்பவம் மீண்டும் கிளப்பப்பட்டிருந்ததே!

கடந்த வாரம் நடைபெற்ற வருடாந்த நீதித்துறை மகாநாட்டில் உரை நிகழ்த்திய பதில் பிரதம நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தா கடந்த ஜூன்மாதம் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் சிலரின் இல்லங்களுக்கு முன் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களைக் கண்டித்திருக்கிறார். இவ்வித பயமுறுத்தல்கள் நீதிச் சுதந்திரத்துக்கு ஒரு சவால் என்றும், பொலிஸ் அதிகாரிகள் எவ்வித பாரபட்சமுமின்றி இவ்வித சம்பவங்களை முறியடிக்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமென்று ஆட்சித் தலைவர்கள் அடிக்கடி நினைவூட்டுவதைக் கேட்டு மக்கள் அலுப்படைந்திருக்கலாம்.

அர்த்தமுள்ள மக்கள் ஆட்சியில், இவ்வித சம்பவம் நடைபெற இடமிருக்குமா? அவ்வாறு நடந்தபோதிலும் அதற்குத் தண்டனையே இனிமேல் நடக்காது தடுக்கும் முறை. அது நடந்ததா?

நல்ல சூரிய வெளிச்சத்தில் நடந்த 'ஆர்ப்பாட்ட நாடகம்' எவ்வாறு பொலிசாரின் பரிசோதனைக் கெட்டாது போய்விட்டது? இதுவே பதில் பிரதம நீதியரசரின் வாதம்.

இவ்விடயத்தை ஒட்டி நீதிஅமைச்சர் பாராளுமன்றத்தில் அளித்த விளக்கத்துக்கு இன்னொரு அங்கத்தவர், "இந்நாட்டு மக்கள் முட்டாள்களென்று அமைச்சர் நினைக்கிறாரா" வென்று பதிலளித்திருந்தார்.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்புக்களை எவ்வித பாகுபாடுமின்றி சமத்துவ நிலையில் நின்று தெய்வத்தின் ஆணையென்ற மனோபாவத்துடன் வழங்க கடமைப்பட்டவர்கள்.

இந்தக்கருத்தை வற்புறுத்திய பதில் பிரதம நீதியரசர், அரசாங்கம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியோ அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தோ தீர்ப்புக்களில் மாற்றங்களைச் செய்ய முனையக்கூடாது" என்று ஆணித்தரமாக இறுக்கியிருப்பது பொதுமக்கள் நீதியில் உள்ள விசுவாசத்தைப் பலப்படுத்தவும் அண்மையில் உருவான சந்தேகத்தை நீக்கவும் வல்லது ஜனநாயகமென்ற போர்வை பல அநீதிகளுக்கிடமளிக்கின்றது.

மக்களுக்கும் அரசுக்கும் பிணக்கு ஏற்படும் போது குறிப்பாக மனித உரிமைகள் மீறப்படும் போது நீதியை நிலைநாட்ட சுதந்திர நீதித்துறை இன்றியமையாத அங்கம்.

அதற்கு மாசு ஏற்படுமானால் உப்புத்தன் காரத்தை இழந்தது போலாகும். சுதந்திர ஆட்சியில் இவ்வித நிலையை சிலநாடுகளில் நாம் காண்கின்றோம். கலகங்களும் கலவரங்களும் இந்த அராஜக நிலையில் இடம் பெறுவது அதிசயமா?

எங்கள் நாட்டில் இந்த நிலை இலகுவில் ஏற்படுமென்று நாம் நினைக்கவில்லை; இருப்பினும் கடந்த கலவரங்களுக்கு இந்த ஆர்ப்பாட்டம் ஒரு ஒத்திகையா?

## திருமுறைப்பதிக வெளியீடு

(சுழிபுரம்)

அளவெட்டியிலுள்ள ஸ்ரீசிவாயசுப்பிரமுனிய சுவாமி ஆச்சிரமத்தினர் மாதம் தோறும் திருமுறைப் பதிகங்களை அச்சிட்டு வெளியிட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இப்பதிக வெளியீடுகளை நாடு பூராகவும் பலர் படிக்கக்கூடிய வகையில் பரப்பும் பணியில் வழக்கம்பரை சனசமூகப்ஜனசபையினர் ஈடுபட்டுள்ளனர். (கு)

# இவ்வாரம் நிகழும் குருமாற்றம் உங்களுக்கு எப்படி?

ஜனனமாகும்போதே ஆண்டவன் பூர்வஜன்ம பாவபுண்ணியங்களுக்கு ஏற்றபடி நவக்கிரஹங்களின் பார்வையில் ஒவ்வொரு ஜீவனும் வளர்ச்சியைப்பெறுகிறது, புண்ணியங்களைச் செய்தவர்கள் அதற்கேற்றநற்பலன்களையும் பாவங்களைச் செய்தவர்கள் அதற்குண்டான தண்டனைக்காகக் கஷ்டங்களையும் பெறுகின்றனர். எந்தக்கோளும் ஜெனனமான நட்சத்திரத்திற்கும் ஏற்ற பலனையே அளிக்கும் இதுபொதுவிதியென ஜோதிட நூல்களின் கூற்று. எப்பொழுதும் சந்திர லக்கினம் அல்லது கோசாரத்திற்கு என்ன பலன்கள் உண்டாகும் என்று அறிவதுடன் ஜென்ம லக்கினத்திற்கும் கிரக மாறுதல்களினால் ஏற்படக்கூடிய பலன்களையும் அறிந்திருந்தால் எந்தக்காரியங்களில் பிரவேசிக்க முயன்றாலும் சுலபமாக அனுகூலங்களையும் பெறலாம். கிரகங்கள் நல்ல அனுகூலமான நிலையில் இல்லை என்று தெரிந்தால் அதில் பிரவேசிக்காமல்இருந்துவிடலாம். இதனால் மனதிற்கு ஆறுதலும், உடலிற்கு வீண் அலைச்சலும் குறையும். பொருள் செலவு இல்லாமலும் இருக்கும். கோசாரபலனிலும் பார்க்க திசா புத்திபலன்தான் முக்கியம் என்பது ஜோதிடம்

**சி. நவரத்தினம்**
**(ஆனைக்கோட்டை)**

கூறும் பொதுவிதி. மேல் அதிகாரிகளைப் போன்ற கிரகங்கள் இருந்து பலன்களைக் கொடுக்கிறார்கள். கிரகங்களைப் பூசிப்பதால் ஓரளவு நிவர்த்திகள் ஏற்படும். நவக்கிரக தோத்திரம், திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய கோளறுதிருப்பதிகம் ஆகியன பாராயணஞ் செய்து வருதல் சாலவும் நன்று. மேலும் "ஸ்ரீ ஆதித்யாயச சோமாய மங்களாய பதாயச குரு சுக்ர சனிப்யச்ச ராஹவே கேதவே நம. என்ற நவரத்தினங்களான நாமங்களைத் தினமும் பக்தியோடு உச்சரித்து நவக்கிரகங்களைத் தினமும் பூசித்து வரும் அன்பர்கட்கு வாழ்க்கையில் சகலவித துன்பங்களும் ஓடி மறைந்து எல்லா நலன்களும் கிட்டும் என்பது உறுதி.

17-12-1983 வைகறைப் பொழுதில் வியாழ பகவான் விருச்சிக ராசியில் இருந்து தனு இராசிக்குப் பிரவேசம் செய்கிறார். ஒரு வருடம்வரை இந்தராசியிலேயே இருப்பார். இவ்வியாழ மாற்றத்தால் இனிமேல் பன்னிரண்டு ராசிகளுக்குமுள்ள கோசாரபலன்களாவன:-

### மேடராசி

நேயர்களுக்கு 9-ம் வீட்டிற்கு வருகிறார். இதுவரை அட்டமஸ்தானத்திலிருந்து "பொன்னவன்" (வியாழன்) செய்த பல இன்னல்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

# கடை திறவாய் எம்பாவாய்

நாம் ஒருவரின் வீட்டுக்குச் செல்லும்பொழுது, வாசற்கதவு பூட்டப்பட்டிருந்தால், வீட்டுக்காரரின் பெயரைச் சொல்லி அழைப்போம். சில வேளைகளில் கதவைத் தட்டியும் அழைப்பதுண்டு. வீட்டிலுள்ளவர்கள் யாராவது வந்து கதவைத்திறப்பார்கள். ஆனால் முன்னைய காலங்களில் பாடல் பாடிக் கதவைத் திறக்கச் செய்த சம்பவங்களைப் பழந்தமிழ் இலக்கியங்களும், பக்தி இலக்கியங்களும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன.

மணிவாசகப்பெருமான் அருளிச்செய்த திருவெம்பாவையிலும், ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையிலும் கதவு திறக்கப்பாடிய பாடல் அடிகளைக் காணக் கூடியதாக இருக்கின்றது

வைகறைப்பொழுதில் கன்னிப்பெண்கள் சிலர் ஒன்று கூடித் தம்தோழியர்களைத் துயிலெழுப்புவதற்காக, அவர்கள் ஒவ்வொருவரினதும் வீடுகளுக்கும் செல்கிறார்கள். வீட்டுக்

**அ. கனகசூரியர்**

கதவுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. தோழி துயின்று கொண்டிருக்கின்றாள், துயிலெழுப்பவந்த தோழியர்களுள் ஒருத்தி வீட்டுக்கதவுக்கு வெளியேநின்று "முத்துப் போன்ற வெண்மையான பற்களையுடைய பெண்ணே, முன்பெல்லாம் நாங்கள் எழுவதற்கு முன்னரே விழித்தெழுந்துவந்து இறைவனை

(8 ம் பக்கம் பார்க்க)

## நீர்வைக்கந்தன் கோவிலில் குருதோஷ நிவர்த்தி பூஜை

[யாழ்ப்பாணம்]

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் வியாழன் மாற்றத்தினால் ஏற்படும் தோஷங்களை நிவர்த்திக்குமுகமாக 'குருகவசவிசேட ஹோமம்' நடைபெறவுள்ளது.

இம்மாதம் 17-ம்திகதி வெள்ளிக்கிழமை பின்னிரவு வியாழ பகவான் இடப்பெயர்ச்சி பெறுவதையொட்டி அன்று தினம் நண்பகல் 12 மணி தொடக்கம் சங்காபிஷேகம் குருகவச விசேட ஹோமம் - காயத்ரீ ஜபம் ஹோமம் ஆராதனை, அர்ச்சனை என்பனவும் முருகப் பெருமானுக்கு அபிஷேகமும், பத்திரபூதி அர்ச்சனையும், சிவ பெருமானுக்கு ருத்திர நமா பாராயணத்துடன் அபிஷேக ஆராதனைகளும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

சகல
தளபாடங்களும்
"ஆர்பிக்கோ"
பொருட்களும்

மலிவு விற்பனை

விலை 100-00 முதல்
7000-00 வரை

டில்கா பேணிச்சர் பலெஸ்

234—236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24186

# "சந்தேகநபர் ஜேர்மனியில் கைது"

## நீதிமன்றத்தில் தகவல்

(நல்லூர்)

''யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கொலைசெய்த சந்தேக நபர் ஜேர்மனி நாட்டில் கைதாகி,உள்ளார். அவரை அந்த நாட்டிலிருந்து இலங்கையில் குற்றவியல் வழக்கு விசாரணைக்கு அழைத்துவருவதற்கு அரசு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது''.

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற வழக்கு விசாரணை, உயர்நீதிபதி ஏ ஜே. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்ற பொழுது மேற்கண்ட தகவலை அரச சட்டத்தரணி சுந்தரம் சிறீஸ்கந்தராசா வெளியிட்டார்.

இவ்வழக்கில் பொலிஸ்உத்தியோகத்தர் முதியான்சலாகே கருணாரட்ன என்பவரை 77ம் ஆண்டு கொலை செய்ததாக யோகசம்பந்தன், த. சிவலிங்கம், அ. தருமகுலசிங்கம்ஆகிய மூவருக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அரச சட்டத்தரணி சுந்தரம் சிறீஸ்கந்தராசாவின் மேற்கண்ட சமர்ப்பணத்தைத் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.


# I. C. M. A. CLASSES

FOR SECTION A
,, B
PART I
PART II

Commences on : 16-12-83
L. S. A. LINKED LECTURES.

Contact :
Mr. A. Ponnambalam,
41, CHAPEL STREET, JAFFNA.

10486

# அரிய சந்தர்ப்பம்

## International Telex Operators Training

பயிற்சிகள் கிழமை நாட்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறும்.
ஆங்கில அறிவு, தட்டச்சு இயந்திரத்தில் பயிற்சி உள்ள இரு பாலாரும் சேரலாம்.
கட்டணம் 650/- மட்டும்
யாழ். நகரில் இங்கு மட்டுமே செய்முறைப் பயிற்சியளிக்கப்படுகின்றன.

ஆரம்பம் 23-12-83

விபரங்களுக்கு:
THE SCHOOL OF COMPUTER STUDIES,
52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

# ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
   இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24310
2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
   இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23596
3. நியூ ப்ரசீதா
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்ரோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 33277

# யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு

# கிறிஸ்மஸ் — புதுவருட

கேக் தயாரிக்க தேவையான சகலவித
பொருட்கள் வேண்டுமா?

| | | |
|---|---|---|
| எசன்ஸ் வகைகள் | — | கஜு |
| பிளம்ஸ் | — | ஜிஞ்ஜர்பிறிசேவ் |
| சவ் சவ் | — | கோல்டன் சிறப் |
| ஐசிங்சுகர் | — | சோப்சுகர் |
| பம்கின் பிறிசேவ் | — | கன்டீட்பீல் |
| செரிஸ் | — | றேசின்ஸ் |
| ஜாம் வகைகள் | — | றவை |
| பேக்கிங் பவுடர் | — | ஓயில்பேப்பர் |

★ குளிர்பானத் தயாரிப்பாளருக்குத் தேவையான எசன்ஸ் வகைகள், கலர் பவுடர்கள், கோடியல் வகைகள், மூடிகள்.

★ பேக்கரிகளுக்குத் தேவையான ஈஸ்ற் வகைகள் பேக்கிங் பவுடர், ஐசிங் சுகர், சொப்சுகர், கோன் (F) பிளவர்.

★ ஹோட்டல்களுக்குத் தேவையான ஜாம் வகைகள் கொக்கோ பவுடர், போன்வீற்றா, ஓவல்ரின், இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்தரக பிஸ்கற் வகைகள், பிளம்ஸ், கஜு.

★ சிறு கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான ஓயில்ப்பேப்பர், றிசியூப் பேப்பர், பிறவுன் பேப்பர், பொலித்தீன் வகைகள், நீலம்,சாம்பிராணி, டல்கம் பவுடர்.

மேலும் சகல விதமான பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
நிதானவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

புஸ்பா ரேட்ஸ்
எசன்ஸ் ஹவுஸ்
மொம்சாக் கட்டிடம்,
11/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24237

(10519)


## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

# கேள்வி அறிவித்தல் 1984

6-10-83ந் திகதியும், 22-11-83ம் திகதியும் என்னால் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப் பெறாத கேள்விகளுக்கும், கிடைக்கப்பெற்று உரிய நேரத்தில் வைப்புப்பணம் செலுத்தாத கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விகள் பற்றிய விபரங்களும், நிபந்தனைகளும், கேள்விப்பத்திரங்களும் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் அவ்வவ் உப அலுவலகங்களில் இன்று தொடக்கம் 20-12-83ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் 21-12-83ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| உப அலுவலகம் | கேள்வி விளம்பரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|
| 1. பண்டத்தரிப்புப் பட்டினம் | 1. நவீனசந்தைக்கடை உட்புறம் | 20,000 |
| | 2. நவீன ,, வெளிப்புறம் (கடை ஒவ்வொன்றிற்கும்) | 25,000 |
| 2. ஊர்காவற்றுறை | 1. சந்தைக்கடை உட்புறம் (ஒன்றுக்கு) | 21,500 |
| 3. சங்கானை | 1. சந்தைக்கடை தொடர்ச்சியாக குடியிருப்பதற்கு | 3,000 |
| 4. கொக்குவில் | 1. கோண்டாவில் கிழக்கு ஆட்டிறைச்சிக்கடை | 8,610 |
| 5. கட்டைவேலி | 1. அல்வாய் மேற்கு பெட்டிவாய்சந்தை | 5,650 |
| | 2. அல்வாய் மேற்கு மீன்சந்தை | 3,600 |
| 6. முள்ளிப்பற்று | 1. இயக்கச்சி பொதுச்சந்தை | 3,010 |
| 7. அச்சுவேலி | 1. அச்சுவேலிப் பொதுச்சந்தை | 54,300 |
| | 2. ,, பொதுச்சந்தை கடை ஒன்று | 3,000 |
| 8. புத்தூர் | 1. புத்தூர் சந்தை | 5,250 |
| 9. காங்கேசன்துறை | 1. காங்கேசன்துறை சந்தைக்கடை 4 (ஒவ்வோர் கடைக்கும்) | 4,000 |
| 10. கரைச்சி | 1. முரசுமோட்டை சந்தை | 2,000 |
| | 2. உருத்திரபுரம் சந்தை டி 8 மாட்டிறைச்சிக்கடை | 9,250 |
| | 3. ,, டி. 10. ,, | 1,000 |
| 11. மானிப்பாய் கிராமம் | 1. கொட்டிலடி சந்தை | 35,510 |
| 12. பண்டத்தரிப்புக் கிராமம் | 1. மாகியப்பிட்டி சந்தை | 3,327 |
| | 2. உப அலுவலக வளவு | 1,000 |
| 13. கோப்பாய் | 1. கோப்பாய் சந்தை | 1,250 |
| 14. புத்தூர் | 1. ஆவரங்கால் மீன்சந்தை காணி நில வாடகை | 1,000 |

தேவநேசன் நேசையா,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை
செயலகம், யாழ்ப்பாணம்.
1983-12-09.

10516

## பாதிக்கப்பட்ட தனியார்துறைசிற்றூழியருக்கு உணவுப்பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதால் பாதிக்கப்பட்ட அரசாங்க அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்ட தனியார்துறை சிற்றூழியர்களுக்கு 5ம், 6ம், 7ம் கட்ட உணவுப்பொருட்கள் வழங்கும்படி யாழ். அரசாங்க அதிபர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்ட பாதிக்கப்பட்ட தனியார்துறை வர்த்தக தொழிலாளர் நலன்புரிச்சங்கப் பொதுச்செயலாளர் திரு. து கணேசலிங்கம், யாழ். அரசாங்கஅதிபர் திரு தேவநேசன் நேசையா, யாழ் மாவட்டபதில் சமூகசேவைப் பணிப்பாளர் திரு என், அமிர்தசாகரன் ஆகியோருடன் தொடர்புகொண்டு, பாதிக்கப்பட்ட ஊழியர் பிரச்னைகள் பற்றி எடுத்துச்சொன்னார்.

இதனைத்தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தார்.

பாதிக்கப்பட்ட மூவாயிரம் பேரில் ஆயிரம் பேருக்கு மாத்திரம் உடுபிடவைகள் வழங்கப்பட்டதாகவும், மீதிப்பேருக்கும் வழங்கவேண்டுமென்றும் திரு. கணேசலிங்கம் வலியுறுத்தியுள்ளார்

வேலைநிறுத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் டிசம்பர் மாத உணவுமுத்திரை, வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருமாத வரட்சி நிவாரணப்பணம் ஆகியன வழங்கப்படாதது குறித்து அவர் அரசாங்க அதிகாரிகள் கவனத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார். (மா)

## "கூட்டுறவுக்கிளை காப்புறுதி முழுத்தொகையும் கிடைப்பதில்லை"

### தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. வின் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''கூட்டுறவுச்சங்க கிளைகளில் களவு, கொள்ளை சம்பவங்களால் சங்கங்கள் நட்டமடைய வேண்டியுள்ளது. எல்லாக் கிளைகளும் காப்புறுதி செய்யப்பட்டாலும் இழப்புக்குரிய முழுத்தொகையும் பெற்றுக் கொள்ள முடிவதில்லை''.

இவ்வாறு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபையின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கத்தலைவர் திரு, சி. சிவமகராசாவால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு விதமான இடர்பாடுகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன. தாராளமான இறக்குமதிக்குவிப்பு, கூட்டுறவுச்சங்கங்களுக்கு இருந்துவந்த ஏகபோக உரிமைகள் பறிப்பு, வருமான, வியாபார மொத்த விற்பனை வரிகள் அதிகரிப்பு போன்ற பல்வேறு தாக்கங்களைக் கூட்டுறவுச்சங்கங்கள் எதிர்நோக்கி வருகின்றன.

''இன்றைய அரசு கூட்டுறவுத்துறையைப் பொறுத்த வரையில் ஒரு ஸ்திரமான கொள்கையைக் கடைப்பிடிப்பதில்லை. நெருக்கடியான காலத்தில் கூட்டுறவுத்துறையைப் பயன்படுத்துகிறது. ஆனல் கூட்டுறவுத் துறைக்கென எந்தவித பாதுகாப்போ, ஊக்குவிப்போ கொடுப்பதில்லை. கூட்டுறவுத்துறையும் தனியார்துறையுடன் போட்டியிட்டுத்தான் முன்னேறவேண்டியிருக்கிறது. தனியார்துறையிலும்பார்க்க கூடுதலானபழுக்களை கூட்டுறவுச் சங்கங்கள் சுமக்க வேண்டியிருக்கின்றது.

''வியாபார மொத்த விற்பனைவரி அதிகரித்தமையினால் எமது வியாபாரத்தில் ஒரு மந்தநிலை ஏற்பட்டது, தனியாருடன் போட்டிபோட்டு வியாபாரம் செய்ய முடியாமல் இருந்தது.

''பல கிளைகளில் பாலர் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலைகளில் கற்பித்தலுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மகளிர்களுக்கென ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வகுப்பில் 40 பேர் வரையில் பயிற்சி பெறுகின்றனர். இந்த வகுப்பு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது. இப்படியான பயிற்சி வகுப்பு தமிழ் மொழியிலும் நடாத்த ஆலோசிக்கப்பட்டுவருகிறது.'' (கு)



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட கணநாதன் ஜெயக்குமார் சிரேஷ்ட அரச சட்டத்தரணியாக அக்டோபர் முதல் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர் 1975 ஆம் ஆண்டு அரசாங்க சட்டத்தரணியாக நியமனம்பெற்றார். 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்தபின்னர் அரச சட்டத்தரணியாக நியமிக்கப்படும் வரை காலஞ்சென்ற பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ஏ. சி. டி சொய்சாவின் உதவியுடன் பலவழக்குகளில் ஆஜரானர். 1975 ஆம் ஆண்டிலிருந்து 1981 வரை கொழும்பு மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு மேல்நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் பல குற்றவியல் வழக்குகளில் ஆஜரானர்.

காத்தான்குடி மக்கள் வங்கி மோசடி வழக்கு, பளை இலங்கை வங்கி மோசடி வழக்கு கமலம் கொலை வழக்கு, கொழும்பு உணவு இலாகா மோசடி வழக்கு போன்ற பிரபல வழக்குகளில் வழக்குத் தொடுநர் சார்பாக ஆஜரானர். யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர் 1967 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்திற்கு அனுமதி பெற்று எல். எல். பி பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'லைன்ஸ்மன்' இருவர் நடத்திய 'நாடகம்'

[புலோலி]

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத் தொலைபேசி இலக்கத்தைப் பாவித்து வேறு ஒரு தொலைபேசியில் சுமார் ஒரு வருடமாகக் கொழும்பு போன்ற வெளி இடங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்ததாகக் கூறப்படும், இரு தொலைதொடர்பு 'லைன்ஸ்மென்' கள் கையும் மெய்யுமாகப் பொலிசாரிடம் சிக்கிக்கொண்டனர்.

வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத் தொலைபேசி கடந்த மூன்று மாதங்களாகப் பழுதடைந்திருந்த போதிலும், தொலைபேசிக் கட்டணமாக 27,900 ரூபா கணக்கிடப்பட்டிருந்தது!

இதுபற்றிய விசாரணையில் வேறு இடத்தில் பொலிஸ் நிலைய இலக்கத்தைப் பாவித்துத் தொலைபேசி எடுக்கலாம் என்று தெரியவந்ததைத் தொடர்ந்து பொலிசார் விரித்த வலையில் இருவரும் சிக்கிக் கொண்டனர்.

இதுபற்றி வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அன்ரன் சந்திரசாகராவிடம் கேட்டபோது; சந்தேகத்தின்பேரில் லைன்ஸ்மென்களான ஐ. செல்லத்துரை, ஏ இந்திரபால் ஆகியோர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறினர்.

இவ்விருவரும் தன்னியக்கத் தொலை தொடர்பு நிலையத்திலிருந்து சட்டவிரோதமாகக்

(7-ம் பக்கம் பார்க்க)


வருடாந்த
இருப்புக் குறைத்தல்
சகல மின்சாரப்
பொருட்களும்

மலிவு விற்பனை

விலை 5-00 முதல்
9275-00 வரை

அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

ஃபோம்
அதிசய சலவை தூள் உங்கள்
துணிகள் வெண்மையாகவும்
பளபளப்பாகவும் துவைக்கும்

நயமான விலையும் கூட




சாளமாக நுரைக்கும்
நன்றாகக் கரையும
துணிகளின் அழுக்கை விரைவாக நீக்கும்
சிக்கனம் மிக்கது

தயாரிப்பாளர்:
சின்டெட் கம்பனி பிரைவேட் லிமிட்டெட்
தொழில் நுட்பஒத்துழைப்பு
தெய்கோகு ககோ கம்பனி லிமிட்டெட்
ஒசாகா, யப்பான்
கிளை ஸ்தாபனம்
55, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

கோஸ்ட்
முழு ஆடை நிறைந்த பால் மா




உடன்
உங்கள் பிள்ளைகள்
வளருவதை
கவனியுங்கள்

கோஸ்ட் முழு ஆடை நிறைந்த பால் மா, ஒல்லாந்திலிருந்து உங்களுக்கு கிடைக்கிறது. அதிக சுவையுள்ளது. விட்டமின்கள் ஏயும் டீயும் செறிந்தது. விரைவில் கெடாதது. கிருமி ஒழிக்கப்பட்டது. நீண்ட காலம் வைக்கக்கூடியது. தேநீர், கோப்பி, கொக்கோ ஆகியவற்றுடனும், சமையலுடனும். பாவிக்கலாம். முழுக்குடும்பத்திற்குமான சக்திபானம்.

நாடு முழுவதிலும் கிடைக்கும்.

400 கிறும்ஸ்-ரூபா. 38/50
900 கிறும்ஸ்-ரூபா. 80/-

விற்பனை விநியோகஸ்தர்கள்
பெயர்பீல்ட் டிரேடிங் கம்பனி லிமிட்டெட்
(கார்மார்ட் குறூப் அங்கத்தவர்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ராஜன் - பாரதி
**பூவும் பொட்டும்**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க நேரமில்லை**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
இலக்ஷ்மி சுமித்ரா
**மூன்றாம் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்
பால் இனிய இசையால்...
சிறந்த கதையால்
உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
**நீரும் நெருப்பும்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**ரகசிய பொலீஸ் 115**

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
காதலி, சகுனிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில்
தேன்சிந்தும் அமுத ராக
மாய், காதலின் அமர
காவியமாய் பார்ப்பவ
ரைப் பரவசமூட்டி-
மீண்டும் பார்க்
கத்தூண்டும் - சிந்திக்க
வைக்கும் - அதி உன்னத
காதல் ஓவியமாய் பவனி
வந்த வண்ணத்திரை
விருந்து!
சிவகுமார் — ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**Regal** From Today
Daily 10-30, 2-30, 4-45
7-00 p. m Only
பயங்கர
காதல் விவகாரம்...
தன் பணத்தால் எதை
யும் செய்யக்கூடிய வல்
லமைபொருந்திய கிரேக்க
தேசத்து கோடீஸ்வர
னும், பிரபல்யம் வாய்ந்த
முதல் பெண்ணும் ஆகிய
ஓனஸிஸ் - ஜாக்குலின்
கென்னடியின் காதலை சித்
தரிக்கும் காவியம்
Anthony Quinn......
Jacqueline Bisset...... in
**The Greek Tycoon**
(Color)

வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**


## லென்ஸ்மென்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கும், வெளி இடங்களுக்கும் பலருக்குத் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்துவருவதாகவும், ஒரு தொலைபேசித்தொடர்புக்கு 20 ரூபா பெற்றுவருவதாகவும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத் தொலைபேசி இலக்கத்தையே இவர்கள் பாவிப்பதாகத் தகவல் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சிவில் உடையில் பொலிசார் ஒருவர் அங்கு சென்று 20 ரூபா கொடுத்து கொழும்புக்குத் தொலைபேசித் தொடர்புகேட்டதாகவும், அவ்விருவரும் காசைப் பெற்றுக்கொண்ட பின்னர் தந்திக் கம்பத்தில் ஏறி தொலைத்தொடர்பு ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்த போது அங்கு சென்ற பொலிஸ் கோஷ்டி அவர்களைப் பிடித்துக் கொண்டதாகவும் தமது குழுவில் தொலைதொடர்பு உத்தியாகத்தர் ஒருவர் இருந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் இருவரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் விசாரணை நடைபெற்று வருகிறது. (க)


**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாகப் பிரிவினை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன் - பிரமிளா
**அரங்கேற்றம்**
15-12-83 முதல்
எங்க தங்க ராஜா


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் அரசடி வீதி இல. 65 (79)ல் வசித்த எனது தந்தை காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. த. சோமசுந்தரம் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்த யாவரும் தங்கள் கொடுக்கல் வாங்கலைப் பற்றிய முழு விபரத்தையும் எழுத்து மூலம் எனது சட்டத்தரணி யாழ்ப்பாணம் பிறவுண் வீதி இல. 28ல் (பிறவுண் வீதி/ அரசடி வீதி சந்தி) வசிக்கும் திரு. அ. சண்முகநாதனுக்கு 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் திகதிக்கு முன் அறிவிக்கும்படி இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

சோ. யோகசுந்தரம்

10504


**MODERN COMMERCE**

பீச் றோட் பருத்தித்துறை

ஆரம்பம்

A/L 8, 4/5 -1-1-84 பி.ப. 4 மணி
(2-வது பிரிவு)


G.A.Q. 1-1-84 பி.ப. 2 மணி

English 8-1-84 பி.ப. 3 மணி

10460


## முதலாண்டு நினைவு அஞ்சலி

24 - 12 - 1925



24 - 11 - 1982


### அமரர் வே. தர்மலிங்கம்

[கட்டட ஒப்பந்தகாரர் - அரியாலை மத்திய ஐக்கிய பண்டகசாலைத் தலைவர் - கிராமோதய சபை உறுப்பினர்]

எங்கள் அன்புத் தெய்வமே!
தியாகச் சுடராகி எங்களை
வாழ்வித்த உங்களின் அன்பு நினைவுகளும்
ஆற்றொணாப் பிரிவுத்துயரும் என்றும் எங்கள்
உள்ளங்களில் மாறாமல், மறையாமல் நிலையாக
நிற்கும். உங்கள் சாந்திக்காக நிதமும்
பிரார்த்தித்துக் கொண்டிருப்போம்.
என்றும் போல எதிர்காலங்களிலும் எமக்கு
ஒளி விளக்காகி எம்மை வழிநடாத்திச் செல்ல
வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள்,
(10513) பேரன், பேத்தி, உறவினர், ஊழியர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அ. பேரம்பலம்

உரிமையாளர்: அ. பேரம்பலம் அன் சன்ஸ்
142, ஆஸ்பத்திரி வீதி.

எம் அனைவரின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்ட எம் அன்புத் தெய்வமே! இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பறந்துவிட்டனவெனினும், நின் நினைவு உங்கள் அன்பு எம் நெஞ்சங்களை விட்டு என்றென்றும் பறக்காதையா.

ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை அஞ்சலி செய்யும்
அன்புத் தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ராஜாலயா",
கடைச்சாமி வீதி,
வண்ணார்பண்ணை.

10413


மீண்டும்! தொலைக்காட்சியில் சென்னை நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ளவும் நாடவேண்டியது

**வீனஸ்** 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

### மரக்கறி வியாபாரி மரணவிசாரணை:

# சந்தேகநபர் மூவரையும் கைதுசெய்ய உத்தரவு!

(புலோலி)

''நான் தகவலறிந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு ஓடிப்போய் பார்த்தபோது பஸ்சிற்குள் எனது கணவர் இரத்த வெள்ளத்தில் கொலையுண்டு கிடந்தார். இவர் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தன்னை மூவர் வெட்டுவதற்குத் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார்.''

இவ்வாறு இறந்தவரின் மனைவி பரஞ்சோதிசூரியகாந்தி (வயது 48) சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

மரணமானவர் இறந்த இடமான பருத்தித்துறை எரிந்த அம்மன் கோவிலடிக்கு அருகாமையில் நடைபெற்ற ஸ்தல விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த இறந்தவரின் மனைவி குறிப்பிட்டதாவது:

இறந்தவர் எனது கணவர் அவர் பருத்தித்துறைச்சந்தையில் மரக்கறிவியாபாரம் செய்பவர் சுன்னாகம் சந்தைக்கு அதிகாலையில் சென்று மரக்கறிவாங்கிவருவது வழக்கம். வழமைபோல் அன்று காலை 4 மணிக்கு சாக்குகளுடன் காசு 8400 ரூபாவும் கணக்குப்புத்தகமும் கொண்டு சென்றார். அவர் தனியவே சென்றார். சாரமும் சேட்டும் அணிந்து சென்ற அவர் கையில் மணிக்கூடும், மோதிரமும் போட்டேசென்றார் அவர் சென்ற சுமார் அரைமணித்தியாலத்தின்பின் இறந்தவரின் தங்கையான தங்கலிங்கம் ஈஸ்வரி ஓடிவந்து அண்ணாவை எரிந்த அம்மன் கோவிலுக்கு அண்மையில் பஸ்சிற்குள் வைத்து வெட்டுகிறார்கள் என்று சொல்லிக்குளறினார். நான் உடனடியாக சம்பவம் நடைபெற்ற பஸ்நின்ற இடத்திற்கு வந்தேன்.

பஸ்சிற்குள் ஏறிப்பார்த்தேன். எனது கணவர் காயங்களுடன் இறந்து கிடந்தார். பஸ்சிற்குள் இரத்தமும்காணப்பட்டது. அவர் இறப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் தன்னைச்சுக்கானியின் மகன் கதிர்காமநாதனும், முத்துலிங்கத்தின் மகன் கணேசலிங்கமும், செல்வராசாவின் மகன் அன்னராசவும் வெட்டுவதற்குத் திட்டம் தீட்டியிருப்பதாகச் சொன்னார். நாங்கள் வளர்க்கும் மகன் நேசராசா ஸ்ரீனிவாசனுக்கும் இவர்கள் மூவருக்கும் சிலநாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட தகராறுதான் இக்கொலைக்கு காரணமாகும். நான் கூறிய மூவரும்தான் எனது கணவனைக் கொலைசெய்திருக்கலாமென சந்தேகம் கொள்கிறேன்.''

சாட்சியங்களையடுத்து பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான் திரு. செல்லத்தம்பி சந்தேக நபர்கள் மூவரையும் கைதுசெய்து மன்றில் ஆஜராக்குமாறும் பொலிசாருக்கு உத்தரவிட்டார். (க)

## "'ஐயோ' என்ற சத்தம் கேட்டதும் பஸ் நிறுத்தப்பட்டது"

### சாரதி சாட்சியம்

(புலோலி)

''சாரமும் சேட்டும் அணிந்த இரு இளைஞர்கள் பஸ்ஸில் முன் பக்கத்தில் ஏறி என்னைத் தாண்டிச் சென்றார்கள். பஸ்சின் முன்பக்கத்தில் அடிவிழுந்த சத்தமும், ஐயோ என்ற சத்தமும் கேட்டன. பஸ் நிறுத்தப்பட்டது. நான் பயத்தினால் பஸ்சிலிருந்து இறங்கி ஓடினேன்.''

இவ்வாறு, பஸ் வண்டியில் சென்று கொண்டிருந்த பருத்தித்துறை மரக்கறி வியாபாரி செல்லத்துரை பரஞ்சோதி என்பவர் பஸ் மறிக்கப்பட்டு பயங்கரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான மரண விசாரணையில் சாட்சியமளித்த பருத்தித்துறை போக்குவரத்துச்சபை பஸ் நடத்துநர் கந்தர் இளையதம்பி குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பதில் நீதவான் திரு வ. செல்லத்தம்பி ஸ்தல விசாரணையை மேற்கொண்டார். பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. மகேந்திரன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

தொடர்ந்து சாட்சியமளித்த பஸ்நடத்துநர் இளையதம்பி குறிப்பிட்டதாவது;

சம்பவதினம் அதிகாலைநான் மானிப்பாய் நவாலி பஸ்சில் கடமை புரிந்தேன். பஸ்நிலையத்திலிருந்து பஸ் புறப்பட்ட போது இறந்தவருடன் மூவர் பஸ்சில் இருந்தனர். அவர்கள் சுன்னாகம் செல்வதற்கு டிக்கட் எடுத்திருந்தனர்.

இறந்தவர் இரண்டு சாக்குகளுடன் ஏறி சாக்குகளைப்பற்றிப் பெட்டிக்கு மேல்வைத்துவிட்டு சாரதிக்குப் பின்னால் உள்ள இரண்டாவது ஆசனத்தில் அமர்ந்தார். பஸ்சில் இருந்தவர்கள் பருத்தித்துறைச் சந்தையில் மரக்கறி விற்பவர்கள் என எனக்குத் தெரியும். அதில் ஒருவர் சிங்கப்பூர் என அழைக்கப்படுபவர். பஸ்நிலையத்திலிருந்து பஸ் புறப்பட்டு சுமார் ஒரு மைல்தூரம் வந்ததும் எரிஞ்ச அம்மன்கோவிலடியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இரண்டு இளைஞர்கள் நின்று மறித்தார்கள். சாரதி பஸ்சை நிறுத்தினார். இருவரும் பஸ்சில் ஏறி என்னைத்தாண்டி பஸ்சின் முன்பக்கம் சென்றார்கள் நான் பெல் அடித்ததும் சாரதி பஸ்ஸை எடுத்தார்.

முன்பக்கத்தில் அடிவிழுந்த சத்தமும் ஐயோ எனக் குளறிய சத்தமும் கேட்டன. பஸ்சில் இருந்த மூன்று பிரயாணிகள் பின்பக்கமாக ஓடிவந்தார்கள். பஸ் சொற்பநேரத்தில் நிறுத்தப்பட்டது. ஒருவர் பொல்லால் ஓங்கியடித்ததைக் கண்டேன். ஆனால் யார் அடித்தார்கள் என எனக்குத் தெரியாது. நான் பயத்தினால் பஸ்சால் இறங்கி வியாபாரி மூலைச் சந்தியில் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு ஓடிச்சென்று டிப்போ அதிகாரியிடம் நடந்ததைபற்றிச் சொன்னேன். பஸ் சாரதிக்கு என்ன நடந்தது என எனக்குத்தெரியாது பின்னர் பருத்தித்துறைப் பொலிசிற்கு சென்று வாக்குமூலம் கொடுத்தேன் அங்கு சாரதி நின்றதைக்கண்டேன். பஸ்ஸில் ஏறிய இருவரும் சாரமும் சேட்டும் அணிந்திருந்தனர். அவர்களுக்கு 25, 30 வயதிருக்கும்''.

பஸ்சாரதி சபாரத்தினம் சங்கரநாயகன் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது ''நான் காலை 4.05 மணியளவில் கடமையேற்றேன். பஸ்நிலையத்திலிருந்து சுமார் ஒருமைல் தூரம் பஸ் சென்றதும் இருவர் பஸ்சை மறித்தார்கள். பஸ்சை நிறுத்த அவர்கள் ஏறினார்கள். மணி அடித்ததும் நான் பஸ்சை எடுக்க இரும்பில் அடிவிழுந்ததுபோன்ற சத்தம் கேட்டது. அப்போது ஐயோ என்ற சத்தமும் கேட்டது நான் திரும்பிப் பார்த்தபோது இறந்தவர் பஸ் சிற்குள் கீழே கிடந்தார். ஒருவர் தடியினால் ஓங்கி அடிக்க முயற்சித்ததைக் கண்டேன் நான் பயத்தினால் பஸ்சை நிறுத்திவிட்டுஇறங்கிஓடினேன் பின்னர் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்தேன் என்றார்.

மேல் விசாரணை நாளை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (கு)

## கடை திறவாய்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'என் தந்தை, இன்பவடிவினன், அமுதம் போன்றவன்' என்றெல்லாம் வாய் இனிக்கப் பேசி எங்களைத் துயில் எழுப்புவாய். இப்பொழுது இங்குநீயே துயில் கொள்கிறாய். எழுந்து வந்து வாசற் கதவைத் திறப்பாயாக'' என்கிறாள்.

''முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்
தெதிரெழுந்தன்
அத்தன் ஆனந்தன் அமு
தனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்
துன் கடைதிறவாய்'' என்ற திருவெம்பாவைப் பாடல் அடிகளில் மேற்கண்ட பொருள் அடங்கியிருக்கிறது. திருவெம்பாவையின் இன்னொரு பாடலில்,

''மாலறியா நான்முகனும்
காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள
பொக்கங்களேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ
கடைதிறவாய்''

என்ற அடிகளும் கதவு திறக்கும்படி தோழிகள் கேட்பதாக அமைந்திருக்கிறது ''திருமால் அறியாத திருவடியையும், பிரமா அறியயாத திருமுடியையும் உடைய மலைபோலும் பேரொழிப் பிழம்பாய் நின்ற இறைவனை நாம் அறிய முடியுமென்று நினைக்கும்படி பாலோடு சேர்ந்த தேன்போல இனிமை தோன்ற வாயால் பேசும் வஞ்சகி, வாசற்கதவைத் திறப்பாயாக'' என்பதையே மேற்கண்டபாடல் அடிகள் எடுத்துச் சொல்கின்றன.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த ''திருப்பாவையில்''

''தூமணி மாடத்துச் சுற்
றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேற்
கண்வளரும்
மாமன் மகளே மணிக்
கதவம் தாள்திறவாய்''

என்ற பாடல் அடிகளும், தோழியர்களை அவர்களது சக தோழி ஒருத்தி கதவு திறக்கும்படி கேட்பதாக அமைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

நாம் காலையில் எழுவோம். இறைவன் கழலடி போற்றுவோம்.

## கல்வி அமைச்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது

இத்தந்தியின் பிரதிகள் பார்ட்சை ஆணையாளர், கல்வி மைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## இந்தியா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட மாநாடு, தமிழர்பிரச்னையில் நிரந்தரத்தீர்வு ஏற்படமத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளது. (கு)

## இவ்வாரம்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சூரியனைக்கண்ட பனிபோல நீங்கி, நற்பலன்கள் நாளுக்கு நாள் விருத்தியாகும். புதிய தொழில், பொருளாதாரச் சிறப்பு என்பன படிப்படியாக உயர்ந்து ஓங்கும். எடுத்த கருமங்கள் யாவும் தனக்கு நன்மையாக முடியும். வியாச்சியங்களில் வெற்றி கிட்டும் திருமண விசயங்கள் நற்பலனைத் தரும். புத்திர பாக்கியம், புத்தேனேற்றிரரால் முறம், கணவன் மனைவி உறவு பெருமகிழ்ச்சியளித்தல் அதிர்ஷ்டம் போன்றவற்றினால் நன்மை. தீயசக்திகளின் செயல்கள் குடும்பப் பிரச்னையை ஏற்படுத்தி வீண் வழிகளில் விரயங்களை உண்டாக்கலாம். அவதானமும், விழிப்பும் வேண்டும். தேவையற்ற விவாதங்களில் ஈடுபடாதிருந்து புத்தியாக நடப்பது உத்தமம். இந்த இராசியில் உள்ளோருக்கு தற்போது துலாத்தில் இருக்கும் சனி பத்தாம் பார்வையாக மாதுருஸ்தானமாகிய நாலாம் இடத்தை நோக்குவதால் மாதுரு வர்க்கத்தில் உள்ளோர் மறைவினால் மனத்துக்கமடைதல் உண்டாகும். கடன் தொல்லைகள் மறைதல், புதிய பொருள்கள் வாங்குதல், பூமி போன்றவற்றினாலே லாபமடைதல், சகோதரர் மூலம் நன்மையும், நோய் சுகப்படுதலும் அந்நிய நாடுகளில் தொழில் கிடைத்தலும் புண்ணிய ஸ்தலயாத்திரைகளும், புண்ணிய கருமங்களுக்குப்பொருள்களைச் செலவு செய்தலும், பெரியோர், குரு என்பவர்களின் நல்லாசியைப் பெறுதலும், சமூகத்தில் கௌரவம், அதிகாரம், சிறப்படைதலும், கல்விச்சிறப்பும், வெளிநாட்டுப் பிரயாணங்களினால் நன்மையும், ஆதாயமும், புதுமனைப் பேறும் உண்டாம்.

### இடபராசி

நேயர்களுக்கு வியாழன் அட்டமஸ்தானத்திற்கு வருகிறார். பட்டம், பதவி, இழத்தல், அந்நிய இடங்களில் தொழில் புரிவோர் தம் சொந்த இடத்திற்கும் திரும்பி வருதல், நெருங்கிய உறவினர்கள் மறைவினாலே மனக்கிலேசம் அடைதல், பல வியாகூலமான சம்பவங்கள் நடத்தல், ஆரோக்கியம் கெடுதல், திருடர்கள் தொல்லை, தீ விபத்து ஆகியவற்றால் பொருளழிவு, ஆயுதங்களால் காயம் ஏற்படுதல், எதிர்பாராத அதிக வீண் செலவுகள், அலைச்சல்கள் விஷ ஜெந்துகளினால் பயம் ஏற்படல் சத்திர சிகிச்சை, குடும்பக் கஷ்டம், வித்தைச் சுகம் பாதிப்பு, செய்தொழிலில் வெறுப்பு, பகை, அலைச்சல், இடமாற்றம், உற்றார், உறவினர் பகை, வியாச்சியங்களில் பயம், எதிர்பாராத விபத்துக்கள், திருமணப் பேச்சு வார்த்தைகளில் தடை, தாமதம், பகை, மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம் தடை, வியாபாரிகளுக்கு இத்துறையில் மந்தநிலை, தொழில் ஸ்தாபனத்தை மூடுதல், ஊழியர் பகை, எந்நேரமும் வைத்தியரிடம் தேடி அலைய நேரிடும். தெய்வ வழிபாட்டுடன் நிதானமாக நடப்பது கஷ்டங்களைச் சமாளிக்க ஏதுவாகும். வியாழனுக்குப் பிரீதிசெய்து வருக. வியாழக்கிழமைகளில் விரதமிருப்பது நல்லது. பின்வரும் லெட்சுமணமூர்த்தி திருப்புராணங்களை ஓதிவருக:- (1) ''மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர், அம்மலர்த்தாளிழலடங்கு முன்மையைக் கைமலர்க் காட்சியிற் கதுவ நல்கிய, செம்மலை பல துளஞ் சிந்தியாதரோ'' (2) ''கல்லாவின் புடையமர்ந்து நான் மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக் கப்பாலாய், எல்லாமா யல்லதுமாய் இருந்த தனை, விருந்துபடி யிருந்து காட்டிச்சொல்லாமற் சொன்ன வரை நினையாமல், நினைந்து பவத்தொவுக்கை வெல்லாம்''

(நாளை வரும்)

## சர்வகட்சி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தையே வலியுறுத்தும் என்பதால் வட்டமேசை மாநாட்டின் முதலாவது அமர்வு கூட்டணிக்கு அழைப்பு விடுப்பதென்ற முடிவுக்கே வரும் என நம்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க தமிழர் விடுதலைக்கூட்டணியின் சில சிரேஷ்ட தலைவர்கள் தமிழ் நாட்டிலிருந்து இம்மாத இறுதியில் தாயகம் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்த கூட்டணித் தலைவர்களில் இருவரின் மனைவிமார் தாயகம் திரும்பி உள்ளனர்.

## இப்படியும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்! தெய்வாதீனமாக அவர் உயிர் பிழைத்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் நடந்தது. காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இராமலிங்கம் (62 வயது) என்பவரே உடைமைகளை இழந்தவராவார்.

தமது சோக சம்பவம் குறித்து யாழ். பொலிசில் முறையிட்டுள்ளார்.

அம்முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:

''வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் காங்கேசன்துறையில் உள்ள எமது வீட்டுக்கு இனம் தெரியாத இளைஞர் ஒருவர் வந்தார். அவருக்கு 20 வயதிருக்கும். சாரமும் சேட்டும் அணிந்திருந்தார். கொழும்பில் இருக்கும் உங்கள் மகனும் தமது சகோதரரும்ஒருநபரைத் தாக்கியதால் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களைப் பிணை எடுக்க வேண்டும். நீங்களும் வாருங்கோ என்று அந்த இளைஞர் கவலையுடன் கூறினார்.''

''கணவனின் அனுமதியுடன் நான் இனந்தெரியாத வாலிபருடன் காணி உறுதியையும் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்தேன். பின்னர் யாழ் பஸ் நிலையத்தில் இறங்கி ஆசீர்வாதப்பர் வீதியில் இருக்கும் மகமகனிடம் கூட்டிச் செல்லும்படியும் இதுவிஷயம் குறித்து ஆலோசிப்போம் என்றும் நான் அந்த இளைஞரிடம் சொன்னதும், என்னை யாழ். மத்திய கல்லூரி சப்பல் வீதிவழியாக அழைத்துச் சென்ற இளைஞர் தாலிக்கொடியை பலாத்காரமாக அறுத்ததுடன், கையில் வைத்திருந்த காணி உறுதியையும் பறித்துக்கொண்டு ஓடோடிச் சென்று தலைமறைவாகி விட்டாராம்.''

யாழ். குற்றத்தடும்புப் பிரிவுப் பொலிசார் அந்த இனந்தெரியாத வாலிபரைத்தேடி வலைவிரித்துள்ளனர். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.